**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 316/2022**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW -1 /PW- 1 |
| Name | : திருமதி. அம்மு |
| Father/Husband's Name | : சுரேஷ் |
| Village | : நெ.ஏ 25, கம்பர் தெரு |
| Taluk | : செங்கல்பட்டு |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.02.2026.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது செங்கல்பட்டில் வசித்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். கடந்த 23.02.2022 அன்று மதியம் சுமார் 12.00 மணியளவில் நானும், எனது அப்பா சிங்காரவடிவேலு என்பவரும் செங்கல்பட்டு கோகுலபுரம் பகுதியில் உள்ள பாரதியார் தெருவில் கூல்டிரிங்ஸ் வாங்குவதற்காக சென்று கொண்டிருந்தோம். எனது பின்புறம் மாஸ்க் போட்டு கொண்டு ஒரு ஆண் நபர் நடந்து வந்துகொண்டிருந்தார். எனது கழுத்து பின்புறமாக யாரோ கை வைப்பது போல் இருந்தது. நான் பார்க்கும் போது எனது செயினை அறுத்து கொண்டு ஓடிவிடடார். அந்த செயினின் மதிப்பு 3.5 சவரன் இருக்கும். நான் எனது செயினை பிடித்து கொண்டதால் ஒரு பாதி மட்டும் அறுத்து கொண்டு சென்றார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செயின் துண்டு தான் என்னிடம் இருந்து பறித்து செல்லப்பட்டதாகும். அந்த செயினை பறித்த நபர் மாஸ்க் போட்டிருந்ததால் என்னால் அவரை பார்க்க முடியவில்லை அவர் யாரென்று எனக்கு தெரியாது.

செயினை பறித்து செல்லும் போது நானும், அப்பாவும் தான் இருந்தோம். பிறகு எனது அண்ணன் தாமோதரன் வந்தார். அதற்குள் போலிசார் எனது செயினை பறித்து கொண்டு சென்ற நபரை பிடித்துவிட்டார்கள். எனது அண்ணனும் அந்த நபரை பிடிப்பதற்கு துரத்தி கொண்டு சென்றார். நான் காவல் நிலையத்தில் எனது செயினை திருடி சென்றுவிட்டார்கள் என்று புகார் அளித்தேன். சாட்சியிடம் புகார் காண்பிக்கப்பட்டது சாட்சி அதிலுள்ளகையொப்பம் தன்னுடையது என்றும், அதில் உள்ள விவரங்கள் போலிசார் தான் நடந்ததை சொல்ல சொல்ல எழுதி கொண்டதாக கூறுகிறார். **அந்த புகார் அதசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் இவ்வழக்கு சொத்தின் புகைப்படம் அதசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லையென்று எடுத்துரைத்தார்.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.